டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 27.12.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 157 - Madurai | Online Edition

# தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, டிச.26

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த ஒரு வாரத்திற்கு மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.




தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல், தெற்கு ஆந்திர வடதமிழக கடலோரப்பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, நேற்று வலுவிழந்தது.

இதன் காரணமாக இன்று 27-12-24ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை 28ம் தேதி முதல் 30ம் தேதி வரையில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் சில இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

31ம் தேதி மற்றும் 1-1-2025ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

# மண்டல அளவிலான வேளாண்மைத் திருவிழா

விருதுநகர், டிச.26

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் இயங்கி வரும் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் வருகின்ற ஜனவரி 4 & 5 ஆகிய இரண்டு நாட்களில் மண்டல அளவிலான வேளாண்மைத் திருவிழா வானது பருவநிலை மாற்றமும், வேளாண் உற்பத்தியும் என்ற மையக் கருத்துடன், கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

எனவே இந்த மண்டல வேளாண்மைத் திருவிழாவில் விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளை பார்வையிட்டு, நவீன தொழில்நுட்பங்களை அறிந்து பயன்பெறுமாறு வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கேட்டுக் கொள்கிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு 80988 58549, 81481 93645, 88386 31652, 79043 10808, 94431 85237 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

# கூடுதல் மகசூல் பெற தரமான விதை விவசாயிகளுக்கு அறிவுரை

இராமநாதபுரம், டிச.26

விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களில் கூடுதல் மகசூல் பெற இராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குநர் ம.இப்ராம்சா தொழில்நுட்ப செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதைகளை வாங்கும் போது கூடுதல் கவனத்துடன் செயல்படுவது மிக முக்கியம். விவசாயிகள் சான்று பெற்ற விதைகளைப் பயன்படுத்த வேண்டும்.

சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தும்போது நல்ல தரமான அதிக முளைப்புத்திறன், இனத்தூய்மை, புறத்தூய்மை, வீரியமிக்க உறுதியான பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைவான நாற்றுகள் கிடைக்கும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இதனால் மகசூல் கூடுதலாக கிடைக்கும். விவசாயிகள் விதைகளை வாங்கும் போது உரிய ரசீதினை விற்பனையாளர் களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

இரசீதில் விவசாயின் பெயர், முகவரி, கைபேசி எண், வாங்கும் விதையின் பெயர், அளவு, விலை மற்றும் நாள் போன்ற விவரங்கள் அடங்கியதாக இருக்க வேண்டும் என இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கான விதை ஆய்வு துணை இயக்குநர் ம.இப்ராம்சா அறிவுரை வழங்கி உள்ளார்.

# நிலக்கடலை பண்ணை பள்ளி நடைபெற்றது




திண்டுக்கல், டிச.26

திண்டுக்கல் மாவட்டம், வேட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் கன்னடம் பட்டி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன் ஆலோசனைப்படி நிலக்கடலை பண்ணை பள்ளி நடைபெற்றது. இது ஆறு வகுப்பு களாக நடை பெறுகிறது. கடைசியாக அறுவடையின் போது வயல் விழா நடைபெற்றது . இதில் எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் சீனிவாசன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு கடலை சாகுபடி முறை அதற்கு களை எடுத்து ஜிப்சம் இட்டு மண் அனைத்தால் விழுதுகள் அதிகமாக இறங்கி நல்ல மாகசூல் கிடைக்கும். மற்றும் அதன் பராமரிப்பு முறை பற்றி எடுத்து விளக்கி கூறினார் . கடலை பண்ணை பள்ளி வயல் விழா முத்து பிரியா தோட்டத்தில் விவசாயிகள் 25 பேருடன் சேர்த்து நடத்தப்பட்டது. கடலை விவசாயிகளுக்கு உணவு மற்றும் தேனீர் தலைக்கு தொப்பி கொடுத்து சந்தோசமாக விவசாயிகளுடன் சேர்ந்து நடத்தப்பட்டது. இவ்விழாவில் உதவி தோட்டக்கலை அலுவலர் சக்திவேல், ராஜா ஆகியோர் கலந்து கொண்டு அவர்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறினர். இவ்விழாவிற்க்கு அப்பகுதி விவசாயிகளை உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் ஒருங்கிணைத்து பெரிதும் உதவினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு, அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



தர்மபுரி, டிச.26

தர்மபுரி மாவட்டம், அ.மல்லபுரம் கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், இப்கோ, கள அதிகாரி, கே்அப்துல்லா நெல், மக்காச்சோளம், பயறு வகை மற்றும் காய்கறி பயிர்களில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, சாகரிகா மற்றும் இதர உரங்கள் பயன்படுத்தும் முறை மற்றும் நானோ உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விவசாயி களுக்கு விளக்கினார்.



மேலும், இரசாயன உரங்களின் பயன் பாட்டால் மண்மாசுபடும் மற்றும் மண் வளம் குறையும் என்றும் மண்வளத்தை காக்க நானோ உரங்களை பயன்படுத்தலாம் என்று தெரிவித்தார்.

குறைந்த செலவில் அதிக மகசூல் பெறவும், துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிக்கவும் இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன்படுத்த வலியுறுத்தினார். நானோ உரங் களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் எனக் கூறினார். மேலும், நானோ உரங்கள் வாங்கினால் இப்கோவின் விவசாயி களுக்கான விபத்துக் காப்பீடு திட்டமான சங்கடஹரன் பீமா யோஜனாவின் மூலம் ரூ.2,00,000 வரை காப்பீடு பெறலாம் என்றார்.

# விதை சுத்திகரிப்பு நிலையத்தில் விதைச்சான்று இணை இயக்குனர் ஆய்வு

ராணிபேட்டை, டிச.26

ராணிபேட்டை மாவட்டம் , வாலாஜா வட்டாரத்தில் தபேந்திரன், விதைச்சான்று இணை இயக்குனர், சென்னை ஆய்வு மேற் கொண்டார். அது சமயம் வாலாஜா வட்டாரத்தில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள பணிகளை ஆய்வு செய்து, தற்போது இருப்பில் உள்ள விதை குவியல்களை விரைந்து விதை சுத்திகரிப்பு பணி மேற்கொள்ளவும், விதை முளைப்பு அறிக்கை தரப்பட்ட விதை குவியல்களை சான்று அட்டை பொருத்தி விவசாயிகளுக்கு உரிய பருவத்தில் விதைகள் கிடைத் திட நடவடிக்கை எடுக்கவும் விதை சுத்திகரிப்பு நிலையத்தினை தூய்மையாக பராமரித்திடவும், அறிவுரை வழங்கினார்.

மேலும் வாலாஜா வட்டாரத்தின் முசிறி கிராமத்தில் கிருஷ்ண மூர்த்தி மற்றும் சுந்தர்ராஜனின் வயல்களில் அமைக்கப்பட்ட CO-53 நெல் விதைப்பண்ணையை ஆய்வு செய்து பிற ரக கலவை மற்றும் களைகளை நீக்கி வயல் தரத்தினை பராமரித்து, தரமான விதைகளை உற்பத்தி செய்திடவும், ரசாயன உரங் களுக்கு பதிலாக இயற்கை வழி உரங்களை பயன்படுத்தி விதை பண்ணைகளை அமைத்து தரமான விதைகளை உற்பத்தி செய் திடவும், விதைப்பண்ணை விவசாயிகளுக்கு அறிவுரை வழங் கினார். அது சமயம் வினித் மேக்டலின் விதைச்சான்று உதவி இயக்குனர் வேலூர், அ.மண்டோதரி, விதைச்சான்று அலுவலர், மோகன், உதவி விதை அலுவலர் ஆகியோர் உடன் இருந்தனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 26.12.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 36 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 40 | 44 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 36 | 48 |
| 2 | வெண்டை | 36 | 40 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 17 | 20 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 34 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 20 | 60 | கேரட் | 54 | 58 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 65 | 70 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 66 |
| 6 | புடலை | 30 | 35 | 62 | நூல்கோல் | 48 | 52 |
| 7 | பீர்க்கன் | 48 | 54 | 63 | டர்னிப் | 38 | 42 |
| 8 | சுரைக்காய் | 30 | 34 | 64 | மு.கோஸ் | 25 | 28 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | மு.கோஸ்(கலர்) | | |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 44 | 48 |
| 11 | பூசணி | 14 | 16 | 67 | பட்டாணி | 90 | 100 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 295 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 44 | 69 | இஞ்சி | 46 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 45 | 50 | 70 | புருக்கோலின் | 140 | 160 |
| 15 | சி.வெங்காயம் | 58 | 62 | 71 | பென்னி பீன்ஸ் | 70 | 74 |
| 16 | பெ.வெங்காயம் | 32 | 36 | 72 | குடமிளகாய் | 52 | 56 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 36 | 73 | ஊட்டி அவரை | 100 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 55 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | | | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 70 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 43 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 55 | 60 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 25 | 30 |
| 28 | கறிவேப்பிலை | 75 | 78 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 55 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 35 | 40 | 96 | நேந்திரன் | 70 | 74 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 46 | 97 | செவ்வாழை | 70 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 10 | 12 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | | |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 40 | 44 | | | | |
| 55A | துவரை | | | | | | |

# சிறுதானியத்தில் மதிப்புக்கூட்டல் பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி

தேனி, டிச.26

தேனி மாவட்டம், காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் சிறுதானியத்தில் மதிப்புக்கூட்டல் பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் தலைவர் முனைவர் பெ.பச்சைமால் தலைமையுரையாற்றினார்.

இவ்விழாவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) பொ.மகேஸ்வரன் வரவேற்புரையாற்றி தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள் மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கமளித்தார்.



சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யாசிவ செல்வி சிறுதானியம் மதிப்புக்கூட்டலுக்கு பயன்படும் பழுவைக் குறைக்கும் இயந்திரங்கள், சிறுதானியங்களை பதப்படுத்தும் தொழில் நுட்பங்கள், சேமிக்கும் முறைகள், சிறுதானிய உடனடிக் கலவைகள் பொருட்கள் பற்றி பயிற்சியளிக்கபட்டன. சிறு தானியத்தை சந்தைப்படுத்துவதற்க்கான வழிமுறைகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் முக்கியத்துவம் பற்றி வேளாண் விரிவாக்க வல்லுநர் சபரிநாதன் விளக்கமளித்தார். மேலும் உணவுப்பாதுகாப்பு தரச்சான்றிதழ் மற்றும் தொழில் தொடங்குவதற்கான சான்றிதழ்கள் பெறுவதற்க்கான வழிமுறைகள் பற்றி சின்னமனூர் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் சுரேஸ் கண்ணன் விளக்கமளித்தார். பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கபட்டன. நிறைவில் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யாசிவ செல்வி நன்றி உரையாற்றினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நெல் வயல் சூழல் ஆய்வு



விருதுநகர், டிச.26

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் உள்ள அத்திகுளம் கிராமத்தில் நெல் வயல் சூழல் ஆய்வு குறித்த பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பயிற்சியில் பூச்சிகளை அறிவோம் பூச்சிக்கொல்லி மருந்துகளை குறைவாக பயன்படுத்தி நஞ்சில் லாத உணவினை உற்பத்தி செய்திடுவோம் என்ற நோக்குடன் வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி பயிற்சியை துவங்கி வைத்து அரசு திட்டப்பணி குறித்தும் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை வேளாண்மை பொருட்கள் மானிய விலையில் பெற்றிடவும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் கா அரிபுத்திரன், நெல் வயல் சூழல் ஆய்வு, நன்மை செய்யும் தீமை செய்யும் பூச்சிகள் இனங்கள் கண்டறிதல், பூச்சிகளின் செயல் பாடுகள், பயிரைத் தாக்கும் நோய்கள் அறிகுறிகள், இயற்கை வழிமுறை பயிர் பாதுகாப்பு, உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் பயன்பாடு, முக்கியத்துவம், வருமுன் காக்கும் தொழில் நுட்பங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து பயிற்சி அளித்தார்.

விவசாயிகளுக்கு நேரடி நெல் வயல் ஆய்வு மூலம் பூச்சி இனங்கள் நோய் தாக்கங்கள் அறிகுறிகள் விளக்க படங்களுடன் பயிற்சி வழங்கப்பட்டது. விவசாயிகள் மூன்று குழுக்களாக பிரிந்து வயல் சுற்றுச்சூழல் ஆய்வு செய்து வயலில் காணப்பட்ட நன்மை செய்யும் பூச்சி இனங்களையும் தீமை செய்யும் பூச்சிகளையும், நோய் தாக்கப்பட்ட செடிகள் களையும் சேகரித்தனர். சேகரிக்கப்பட்ட மாதிரிகள் விவசாயிகளுக்கு கண்காட்சி செய்யப்பட்டு விளக்க படங் களுடன் எடுத்துரைக்கப்பட்டது. விவசாயிகள் அலுவலர்களுடன் கலந்துரையாடல் செய்தனர். வயல் ஆய்வில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் அளவீடு செய்யப்பட்டு பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

வேளாண்மை அலுவலர் குருலட்சுமி சுற்றுச்சூழல் ஆய்வு முறை அனைத்து விவசாயிகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், பூச்சி மேலாண்மையில் தீமை செய்யும் பூச்சிகள் நன்மை செய்யும் பூச்சிகளின் பொதுவான எண்ணிக்கை விகிதம் 2:1 கடைப்பிடிக்கப் படுகிறது. தீமை செய்யும் பூச்சிகள் நன்மை செய்யும் பூச்சிகளின்

பொதுவான எண்ணிக்கை விகிதம் 2:1 கடைப்பிடிக்கப்படுகிறது. தீமை செய்யும் பூச்சிகள் நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை விகிதம் 2:1 என்றளவில் இருந்தால் மருந்து தெளிக்கும் முறைகள் தேவை இல்லை. விகிதம் 2:1 விட குறைவாக இருந்தால் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று கூறினார்.

பறவை தாங்கி குச்சிகள், ஒட்டுண்ணி அட்டைகள், இனக் கவர்ச்சி பொறிகள், விளக்குப் பொறிகள், மஞ்சள் நிற ஒட்டு பொறிகள், வரப்பு பயிர் முறைகளை கடைபிடித்து நன்மை தீமை செய்யும் பூச்சிகள் கண்காணிப்பு செய்து நல்ல விளைச்சல் பெற்றிடலாம் என்று கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மகாராணி மற்றும் உதவியாளர் சாமி முருகன் ஆகியோர் செய்திருந்தனர். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மாரிமுத்து பயிற்சிக்கு வருகை புரிந்த விவசாயிகளுக்கு தொழில்நுட்ப துண்டு பிரசுரங்கள் வழங்கி நன்றியுரை கூறினார்.

## ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் கிசான் கோஸ்தி எனும் விவசாயிகள் கருத்தரங்கு

அரியலூர், டிச.26

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையில் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தின் கீழ் கிசான் கோஸ்தி எனும் விவசாயிகள் கருத்தரங்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் பிராஞ்சேரி அருகில் உள்ள விழப்பள்ளம் கிராமத்தில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கீதா தலைமை வகித்தார். மத்திய மாநில திட்டங்களின் வேளாண் துணை இயக்குநர் கணேசன் முன்னிலை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் அங்கக முறையில் பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள், பாரம்பரிய நெல் சாகுபடியின் முக்கியத்துவம், மண் ஆய்வு செய்து உரமிட்டு உரச்செலவைக் குறைத்து மண் வளத்தை பாதுகாக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

வேளாண் துணை இயக்குநர் மத்திய மாநில அரசு திட்டங்கள் குறித்து விளக்கினார். அட்மா திட்ட வட்டார அளவிலான விஞ்ஞானி விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் பரமசிவம் கலந்து கொண்டு வேளாண் சாகுபடியில் விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள், பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

அரியலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) இரசாயன உரச் செலவைக் குறைத்து தேவையான அளவு உரங்கள் மட்டுமே உபயோகித்து மண்வளத்தைப் பாது காத்து, உரச்செலவை குறைக்கும்படி விவசாயிகளைக் கேட்டுக் கொண்டார். கிரீடு வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் திருமலை வாசன் கலந்து கொண்டு பயிர் பாதுகாப்பில் இரசாயன மருந்துகளை பயன்படுத்தாமல் குறைந்த செலவில் மஞ்சள் மற்றும் நீல வண்ண ஒட்டும் அட்டை, விளக்குப்பொறி, இனக்கவர்ச்சிப் பொறிகள் கொண்டு பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகளை விளக்கினார். பயிர் சாகுபடியில் வேப்பெண்ணெய், பஞ்சகாவ்யம், மீன் அமிலம் ஆகியவற்றை பயன்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர் கலைமணி தோட்டக்கலைத் துறை செயல்படுத்தும் திட்டங்கள், மானிய விவரங்கள் குறித்து விளக்கினார். பாரம்பரிய நெல் சாகுபடி விவசாயி சுந்தரேசன் விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் அவற்றின் சிறப்பம்சங்கள் குறித்தும் விளக்கினார். பாரம்பரிய நெல் ரகங்கள், வனவிலங்கு விரட்டி, பஞ்சகாவ்யம், மீன் அமிலம், மறுதாம்பு சோள விதை, அகத்தி விதை, உயிர் உரங்கள், சூடாமோனஸ், டிரைக்கோ டெர்மா விரிடி, கால்நடைகளுக்கான மடி நோய் மருந்து, உண்ணி நீக்க மருந்து ஆகியவை அங்கு அமைக்கப்பட்ட கண்காட்சியில் காட்சிபடுத்தப்பட்டிருந்தன. விவசாயிகள் அவற்றைப் பார்வையிட்டு அவற்றின் பயன்பாடுகள் குறித்து கேட்டறிந்தனர். முன்னதாக அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் பயிர் வளர்ச்சி ஊக்கிகள் குறித்தும் விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஆரோக்கியராஜ், மகேஷ் குமார் உழவர் செயலி பதிவிறக்கி பயன்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினர். இக்கருத்தரங்கில் உதவி வேளாண் அலுவலர் கவிதா, பாலாஜி, உதவி தோட்டக்கலை அலுவலர் சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை ஊராட்சி தலைவர் ராணி, முன்னோடி விவசாயி சண்முகம் ஆகியோர் செய்திருந்தனர். இதில் விழப்பள்ளம், பிராஞ்சேரி கிராமங்களைச் சார்ந்த விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# மாட்டு சாணத்தை விரும்பி வாங்கும் நாடுகள் தெரியுமா?

மாடுகளின் சாணத்தின் மதிப்பை உணர்ந்த வெளிநாட்டினர் போட்டி போட்டுக்கொண்டு வாங்கிட விரும்புகின்றனர். அப்படி என்ன மாட்டுச்சாணத்தில் இருக்கிறது என்றால் நீங்க ஆச்சரியப் படுவீர்கள்.

**மாட்டுசாணத்தில் (COW DUNG) உள்ள சத்துகள்**

மாட்டுசாணத்தில் கால்சியம், பொட்டாசியம், செல்லுலோஸ் நைட்டிஜன் மற்றும் பல நுண் வேதி பொருட்கள் (MICRO NUTRIENTS) மட்டுமல்லாது பல நன்மை செய்யும் நுண்ணுயிர்களும் ஏராளமாக உள்ளன. மாட்டு சாணம் இருந்தாலே அந்த வாடைக்கு ஏகப்பட்ட மண்புழு ஓடியோடு வரும்.

**மாட்டு சாணத்தின் சிறப்பு**

நம்முடைய முன்னோர்கள் காலம்காலமாக மாட்டு சாணத்தையும் கால்நடைகளின் கழிவுகளையும் தான் நிலத்தில் இட்டு வந்தனர். அப்போது எல்லாம் மண்ணின் கரிமசத்து (ORGANIC CARBON CONTENT) அதிகமாக இருந்தது. என்று டிராக்டர் உழவு போடும்முறை வந்ததோ, அன்றிலுருந்து கால்நடைகள் (ஆடு, மாடு) கிராமப்புறங்களில் படிப்படியாக குறைந்து வருகிறது. அதுமாத்திரமல்லாது இரசாயன உரங்களின் பயன்பாட்டால் நல்ல வளமான நிலம்கூட இன்று வளமிழந்து களர் / உவர் நிலங்கள் மாறி வருவதுடன் மண்வளத்தையும் இழுந்து இன்று விளைச்சலை (மகசூலை) கிள்ளிக் கொடுக்கின்றன. அதனால் தான் என்னவோ இயற்கை விஞ்ஞானி ஐயா நம்மாழ்வார், பயிரை பற்றி கூறுகையில், அடி மாட்டுக்கு நுனி வீட்டு' என்றார். அவரை போன்றே பத்மஶ்ரீ சுபாஷ் பாலேக்கர் கூறியதாவது ஒரு பசு மாடு இருந்தாலே போதும், 30 ஏக்கர் விவசாயம் செய்யலாம் என்று.

எனவே இதிலிருந்து மாட்டு சாணத்தின் மகிமையை நாம் அறிவோம். அதுமட்டுமல்லாது கிருமி நாசனியாகவும், எரிபொருள் தயாரிக்கவும் (கோபர் கேஸ்) உரமாகவும் பெயிண்ட் தயாரிக்கவும் விபூதி தயாரிக்கவும் பல்வேறு வழிகளில் சாணத்தை பயன்படுத்த படுகிறது.

**மேலை நாடுகள் குறிப்பாக அரபு நாடுகள் ஏன் போட்டி போட்டுக் கொண்டு வாங்குகின்றன? தெரியுமா?**

அரபு நாடுகள் (குவைத் உள்பட) பாலைவன மணல் நிரம்பிய நாடுகள் அந்த மண்ணில் எவ்வித நுண்ணூட்ட சத்துகளும் இல்லாத காரணத்தால் அங்கு பயிரிடப்பட்ட பேரீச்சம் செடிகளுக்கு நுண்ணூட்ட சத்தும் உரமும் தேவைபடுகிறது. அவர்கள் நம்முடைய நாட்டில் இருந்து அதிக விலைக்கு கொள்முதல் செய்து ஒரு கிலோ 30 முதல் 50 வரை போட்டு போட்டுக் கொண்டு வாங்குகின்றன.

இவற்றை (சாணத்தை) பவுடராக்கி (தூளாக) மாற்றி நன்றாக மக்கிய உரத்தை பேரீச்சம் செடிகளுக்கு இடுவதால் நல்ல தரமான பழங்களும் கூடுதலான விளைச்சலும் தந்துள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. தற்போதுகூட குவைத் நாடு 192 M.T டன் கொள்முதல் ஆர்டர் செய்துள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் கால்நடைகள் கிட்டத்தட்ட 30 கோடிகள் இருப்ப தாகவும், அதன் மூலம் தினமும் 30 லட்சம் டன் சாணம் உற்பத்தியாகின்றது என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும்.




மாட்டு சாணத்திலிருந்து வேளாண் பயிருக்கு தேவையான வளர்ச்சி ஊக்கிகள், பூச்சி விரட்டிகள் என 36 விதமான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா.

எனவே வீட்டுக்கு வீடு கால்நடைகளை வளர்ப்போம், நிலத்தையும் மண்ணையும் வளமாக்குவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தொட்டியம் வட்டாரத்தில் ட்ரோன் மூலம் திரவ பருத்தி பிளஸ் தெளிப்பு செயல்விளக்கம்



திருச்சி, டிச.26

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொட்டியம் வட்டாரம் னி.களத்தூர் கிராமத்தில் பருத்தியில் மகசூல் அதிகரிக்க ட்ரோன் மூலம் திரவ பருத்தி பிளஸ் தெளிப்பு பற்றிய செயல் விளக்கம் நடைபெற்றது. பருத்தியில் பூ மற்றும் சர்பை கொட்டுதலை தவிர்க்க தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் பயிர் வினையியல் துறையின் மூலம் பருத்தி பிளஸ் என்னும் பூஸ்டர் வெளியிடப்பட்டது. இது பருத்திக்குத் தேவையான பேரூட்டச் சத்துக்கள் நுண்ணூட்ட சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்து பூஸ்டர் ஆகும். இந்த பூஸ்டரை பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் 2.5 கிலோ வீதம் ஏக்கருக்கு 5 கிலோ பருத்தி பிளஸ் 200 லிட்டர்தண்ணீரில் கலந்து. இலை தெளிப்பாக தெளிப்பதன் மூலம் பருத்தியில் பூக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு, சப்பை கொட்டுதல் குறைந்து விடும். இதன் மூலம் காய்கள் முழுமையாக வெடித்து சீரான அறுவடைக்கு வழிவகுக்கிறது. இது வறட்சியை தாங்கும் தன்மையை அதிகரிக்கிறது. மேலும் விளைச்சல் 18 சதம் வரை அதிகரிக்கிறது.

தற்போது அதிகரித்து வரும் வேலையாட்கள் தட்டுப்பாடு மற்றும் சாகுபடி செலவைக் குறைக்க ட்ரோன் மூலம் தெளிக்க திரவ பருத்தி பிளஸ் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிகளின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்ய, தொட்டியம் வட்டாரம் களத்தூர் கிராமத்தில்ட்ரோன் மூலம் திரவப் பருத்தி பிளஸ் செயல்விளக்கம் விவசாயிகளின் முன்னிலையில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு) முனைவர் இரா.ஷீபா ஜாஸ்மின், தொட்டியம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சௌந்தர ராஜன், வேளாண்மை உதவி அலுவர் மாசிலாமணி உட்பட தொட்டியம் வட்டாரத்தை சேர்ந்த பல்வேறு விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு ஒருங்கிணைத்தார்.




# நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணை பள்ளி பயிற்சி




திருச்சி, டிச.26

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் சீதேவி மங்கலம் வடக்கு கிராம விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணை பள்ளி பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராணி தலைமை வகித்து துறை சார்ந்த திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம் மற்றும் நீர்வள நிலவள மேம்பாட்டு திட்டம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார்.

வேளாண்மை கல்வி நிறுவனம் குமுளூர் பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் விஜய் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு நிலக்கடலையில் விதை நேர்த்தி செய்முறைகள் நிலக் கடலையில் அதிகம் தாக்கும் இடைப்பேன் தடுக்க ஊதா வண்ண அட்டை பயன்படுத்தும் முறைகள் மற்றும் கடலை இரவைப் பயிரில் தாக்கும் இலை சுருள் பூச்சி கட்டுப்படுத்தும் முறைகள் மேலும் கடலை சுற்றி வரப்பில் பத்து அடிக்கு ஒரு ஆமணக்கு வைத்தால் கடலை பூச்சியை கட்டுப்படுத்தலாம் என்றும் தட்டைப்பயிர் வைப்பதால் நன்மை பூச்சி வரும் என்றும் கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் பன்னீர்செல்வம் உயிர் உரங்களின் முக்கியத்துவம் மற்றும் தமிழ் மண்வளம் மற்றும் நெல் நுண்ணூட்டத்தின் பயன்பாடு குறித்து எடுத்துக் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சிந்தியா உழவன் செயலி பயன்பாடு பற்றி கூறி நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஆத்மா உதவி தொழில்நுட்ப மேலாளர் ஹர்ஷினி செய்திருந்தார்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி

புதுக்கோட்டை, டிச.26

புதுக்கோட்டை மாவட்ட குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் மூலமாக 2024-25 ஆம் ஆண்டிற்கான கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி மணமேல்குடி வட்டார செம்மணாம்பொட்டல் கிராமத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சியில் வேளாண்மை மற்றும் சகோதர துறைகளான தோட்டக்கலை துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையிலிருந்து அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர்.

இந்த பயிற்சியினை குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சி.ஜெயபாலன் துவக்கி வைத்து மண் மாதிரி எடுத்தல், மண் வள மேலாண்மை, பசுந்தாள் உரங்கள், அங்கக வேளாண்மை குறித்த தொழில் நுட்பங்கள் பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். இப்பயிற்சியில் மணமேல்குடி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் தீனவர்மன், காய்கறி சாகுபடி, அரளிப்பூ சாகுபடி தொழில்நுட்பங்கள், மாடி தோட்டம், தென்னை மரக்கன்று வழங்குதல், துறை ரீதியான திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து எடுத்துரைத்தார். இதை தொடர்ந்து வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை உதவி வேளாண்மை அலுவலர், விஜயக்குமார் வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் கடன் வசதி பெறுதல், கலம் அமைத்தல், உழவர் சந்தையில் வேளாண் பொருட்களை விற்பனை செய்வது மற்றும் பொறியியல் துறையில் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் இயந்திரங்கள் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

மணமேல்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.இராதாகிருஷ்ணன், நுண்ணூட்ட சத்துக்களின் முக்கியத் துவம் மற்றும் பயன்பாடு, நானோ யூரியா, மாநில மற்றும் மத்திய அரசு திட்டம் தொடர்பான மானியங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ந.சண்முகி உயிர் உரங்களின் பயன்பாடு, நெல்லில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் பற்றி எடுத்துரைத்தார். மேலும், மணமேல்குடி வட்டார உழவர் மன்ற அமைப்பாளர் இராமு தனது விவசாய அனுபவங்களை பகிர்ந்துக்கொண்டார். இந்த பயிற்சியின் முடிவில் புதிதாக வெளியிடப்பட்ட தானியம், பயறு வகை பயிர்கள் மற்றும் எண்ணை வித்துப்பயிர் ரகங்கள் குறித்த தொழில்நுட்ப கையேடு விவசாயிகளுக்கு வேளாண்மை துணை இயக்குநர் (உபநி) சி.ஜெயபாலன் வழங்கினார். இப்பயிற்சிக்கான முன்னேற்பாடுகளை வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) ந.சண்முகி செய்திருந்தார், பயிற்சியின் முடிவில் நன்றியுரை கூறினார்.

# ஆடாதோடா, நொச்சி கன்றுகள் சாகுபடி செய்ய அழைப்பு

இராணிபேட்டை, டிச.26

இராணிபேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் 'திட்டத்தில் ஆடாதோடா, நொச்சி கன்றுகள் நடவு செய்ய விவசாய பெருமக்களை வாலாஜா வட்டார, வேளாண்மை உதவி இயக்குநர், திலகவதி, கேட்டுக் கொண்டுள்ளார். வாலாஜா வட்டாரத்திற்கு ஆடாதோடா 7000 கன்றுகள், நொச்சி 7000 கன்றுகள் விநியோகம் செய்ய இலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர் கூறியதாவது, ஆடாதோடா இலை பார்ப்பதற்கு பசுமையாக இருந்தாலும் கசப்பு தன்மை வாய்ந்தவை. இதன் இலை மட்டுமல்லாமல் பட்டை, வேர், பூக்கள் போல அனைத்து பாகங்களுமே மருத்துவ குணம் வாய்ந்தவை ஆகும். இந்த கன்று மாவிலை, நுணாவிலையைப் போன்று ஈட்டி வடிவத்தில் நீண்ட பெரிய இலைகளோடு, வெள்ளைநிறப் பூக்களோடு செழுமையாய் வளர்ந்திருக்கும். மூலிகை செடியாகவும் பயன் படுகிறது.

நாற்றங்கால் தயார் செய்யும் பொழுது ஆடதோடா இலைகளை மண்ணில் இட வேண்டும். இது மண்ணின் வளத்தை அதிகரிக்கும். இது பூச்சிக் கொல்லியாக செயல்படுவதோடு, நாற்றுக்களை எளிதாக பிடுங்குவதற்கும் வழி வகுக்கிறது.

அதேபோல் நொச்சி என்பது வரப்பு ஓரங்களில் வளரும் புதர்ச் செடியாகவும் மரமாகவும் வளரக்கூடியது. நொச்சி இலை வேர், பட்டை, விதை பூக்கள் என முழுத்தாவரமுமே மருத்துவ குணங்கள் நிறைந்தவை ஆகும். மிகச்சிறந்த இயற்கை பூச்சிக் கொல்லி விரட்டியாகவும், வேலிப் பயிராகவும், இயற்கை சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பாகவும் பயன்படுகிறது. நொச்சியிலை புகைக்கு கொசுக்கள் விரட்டப்படும். மேலும் தானியங்கள் சேமிக்கும் பாத்திரத்தில் நொச்சியிலையை போட்டு வைத்தால் பூச்சிகளின் தாக்கத்தை தவிர்க்கலாம்.

**தாவர பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பு முறைகள்**

நொச்சி இலைகளை பறித்து சுத்தம் செய்து நன்கு அரைக்க வேண்டும். இவற்றை நல்ல சுத்தமான வடிகட்டிய 3 லிட்டர் மாட்டு சிறுநீருடன் ஒரு இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலையில் இந்த ஊறிய கலவையை நன்றாக கலக்கி 70-80 செல்சியஸ் வெப்ப நிலையில் 3-4 மணி நேரம் கொதிக்க வைக்க

வேண்டும். இக்கலவையை மிகவும் அடர் திரவமாக இருந்தால் அவற்றுடன் காய்ச்சி வடிகட்டிய சுத்தமான தண்ணீரை சேர்த்து ஒரு காடா துணியால் வடிகட்டி அவற்றை ஒருநாள் இரவு முழுவதும் குளிர்விக்க வேண்டும். இதில் 150 கிராம் அளவு சோப்புத்தூளை 250 மிலி தண்ணீருடன் கலந்து இக்கலவையுடன் சேர்க்க வேண்டும். இந்த இறுதி கலவையில் 50 மிலி கலவையுடன் 1 லிட்டர் தண்ணீர் கலந்து தாவர பூச்சிக் கொல்லியாக பயன்படுத்தலாம். இது இயற்கை சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் உள்ளது.

மேலும் வயல் வரப்பு ஓரங்களில் நடவு செய்வதன் மூலம் பூச்சி விரட்டியாகவும் பயன்படுகிறது. எனவே இந்த தாவர பூச்சிக் கொல்லி விரட்டி கன்றுகளை வாலாஜா வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் முழு மானிய விலையில் வாங்கி வயலில் உயிர் வேலியாக அமைத்து பயனடையுமாறு வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னசமுத்திரம் கிராமத்தில் விவசாய பெருமக்களுக்கு, தாவர பூச்சிக்கொல்லி விரட்டியான ஆடாதோடா, நொச்சி கன்றுகளை இலவசமாக வாலாஜா வட்டார, வேளாண்மை உதவி இயக்குநர், திலகவதி, வழங்கினர். வேளாண்மை அலுவலர், நித்யா மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள், ராதிகா, மேகலா உடன் இருந்தனர்.

# நெல்மணி நிற மாற்றம் நோய்

### அறிகுறிகள்

- இந்நோய் பல்வேறு பூஞ்சாணங்களின் கூட்டுத் தாக்குதலினால் உண்டாகிறது.

- நோயினால் பாதிக்கப்பட்ட நெல்மணிகளின் மேல் கரும்பழுப்பு அல்லது சாம்பல் நிறத் திட்டுகள் காணப்படும்.

- நெல் மணிகளின் வளர்ச்சி தடைபடுவதால் மணிகள் சிறுத்து சுருங்கிவிடும் அல்லது பதராக மாறிவிடும். இதனால் மகசூல் இழப்பு ஏற்படும்.

- அரிசியிலும் அதன் வெளித்தோற்றம் பாதிக்கப்பட்டு சுவை கசப்பாக மாறிவிடும்.

- இந்நோய் தாக்கிய விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்கப்படுவதோடு நாற்றுகளும் வீரியமிழந்து காணப்படும்.

### நோய் பரவும் முறை

விதை மற்றும் காற்று மூலம் இந்நோய் பரவுகிறது.

### மேலாண்மை முறைகள்

- நோய் தாக்காத வயலிலிருந்து விதைகளைத் தேர்வு செய்ய வேண்டும்.

- சூடோமோனாஸ் கொண்டு ஈர விதை நேர்த்தி செய்யலாம். 60 லிட்டர் தண்ணீரில் 600 கிராம் சூடோமோனாஸ் தூளை நன்கு கலக்கி 60 கிலோ விதையை இக்கலவையில் 24 மணிநேரம் ஊறவைத்த பின் முளைகட்டி நாற்றங்காலில் விதைக்கலாம்.






- சூடோமோனாஸ் துகள் தயாரிப்பு கொண்டு விதைநேர்த்தி செய்தல். நாற்றுக்களின் வேர் நனைத்தல் மற்றும் நட்ட 40 மற்றும் 50-ம் நாளில் இலை வழியாகத் தெளித்தல் (2 கிராம் துகள் தயாரிப்பு ஒரு லிட்டர் தண்ணீரில்) ஆகிய மூன்று முறைகளையும் பின்பற்றுவதால் பாக்டீரியா நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

- பூக்கும் தருணம் மற்றும் அதற்குப் பின் 15 நாட்கள் கழித்தும் மேன்கோசெப் மருந்தை 0.2 சதம் தெளித்து கட்டு படுத்தலாம்.

இதனை சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அட்மா திட்டத்தின் மூலம் சன்ன ரக நெல் பண்ணைப் பள்ளி

ஈரோடு, டிச.26

ஈரோடு மாவட்டம், தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை, வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை(அட்மா) திட்டம்மூலம் 2024-25 ஆம் ஆண்டுக்கு சன்ன ரக நெல் பண்ணைப்பள்ளியானது கொண்டையம்பாளையம் கிராமத்தில் விவசாயி பிரபுகுமார் தோட்டத்தில் நடைபெற்றது. இதற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.கார்த்திகேயன், தலைமை தாங்கி துவக்கி வைத்தார். இப்பண்ணைப்பள்ளியில் பண்ணைபள்ளி விவசாயிகள் விஞ்ஞானிகளுடன் செயல்விளக்க வயலுக்கே சென்று பூச்சி பிடிக்கும் வலையுடன் நேரடியாக பூச்சிகளை பிடித்தும், நோய் உள்ள பயிர்களை எடுத்தும் வந்தனர்.

அவர்களுக்கு கோபி, மைராடா–வேளாண் அறிவியல் நிலைய உழவியல் துறை விஞ்ஞானி சரவணக்குமார் மற்றும் ஜே.கே.கே.வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் மோகன், ஆகியோர்கள் கலந்துகொண்டு விவசாயிகள் எடுத்து வந்த பூச்சிகள், நோய் உள்ள பயிர்களை ஆய்வு செய்து உரிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினர் மற்றும் களை மேலாண்மை, பூச்சி, நோய் தாக்குதலிருந்து பயிர்களை எவ்வாறு பாதுகாப்பது, ஒருங்கிணைந்த முறையில் பயிர்களை பாதுகாத்தல் போன்றவைகளைப் பற்றி விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துக்கூறினர்.

மேலும் இவ்வகுப்பில் வேளாண்மை அலுவலர் சந்தியா, கலந்து கொண்டு பயிர் காப்பீடு திட்டம், கலைஞர் திட்டம், நுண்ணீர் பாசனம் போன்ற திட்டங்கள் குறித்தும்,தோட்டக்கலைத்துறை சார்பில் தோட்டக்கலை அலுவலர் பவித்ரா கலந்துகொண்டு தோட்டக்கலைத் துறை மானிய திட்டங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் அப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் கலைஞர் திட்ட அலுவலர் ஸ்ரீநாத், உதவி தோட்டக்கலை அலுவலர் வடிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் கொண்டையம்பாளையம், கள்ளிப்பட்டி பகுதியை சார்ந்த 25 விவசாயிகள் கலந்துகொண்டனர். இப்பண்ணைப்பள்ளிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஞானசேகரன், மணிகண்டன்ஆகியோர் செய்திருந்தனர்.

# பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பயிற்சி

கிருஷ்ணகிரி, டிச.26

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் தடத்தரை விவசாயிகளுக்கு பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சியினை வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தொடங்கி வைத்து பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் இயற்கை வேளாண்மைகுறித்து விளக்கம் அளித்தார்.

இந்த பயிற்சியின் போது வேளாண்மை அறிவியல் மையம், எழுமிச்சங்கிரி, முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர், சுந்தர்ராஜ் பங்கேற்று பருத்தியில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, தொழில்நுட்பங்கள் என்று தெளிவாக விளக்கம் அளித்தார். பயிற்சியில் வேளாண்மை அறிவியல் மையம், தொழில்நுட்ப வல்லுநர்கள் ரமேஷ்பாபு, குணசேகர், செந்தில் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். குரோமோட்டார்ஸ் லோகேஷ் உரங்கள், பூச்சி மருந்துகள் பயன்படுத்தும் முறை மற்றும் பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் போது பாதுகாப்பான முறையில் தெளிக்க பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்த வேண்டும், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

வோண்மை அலுவலர் ஜோதி, பங்கேற்று ஒருங்கிணைந்த பண்ணையம், பஞ்சகாவ்யா தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், இயற்கை வேளாண்மை பற்றி எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன் பங்கேற்று, பயிர் பாதுகாப்பு முறைகள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, பயிர் சேதத்தை தடுக்கும் முறைகள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் கொடுக்கப்படும் இடுப்பொருள் மற்றும் சொட்டு நீர் பாசனத்தின் நன்மைகள் பற்றி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர்கள் நரேந்திரன், முருகேசன், செல்வம், தேவராஜ், சுப்புரமணி ஆகியோர் கலந்து கொண்டு உயிர் உர விதை நேர்த்தி செய்தல், தரமான வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும்,

விதைகளை உயிர் பூஞ்சானகொல்லி சூடோமோனாஸ், உயிர் உரங்கள் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா அல்லது 100 மிலி திரவ உயிர் உரங்கள் தேவையான விதையுடன் ஆற வைத்த அரிசி கஞ்சி சேர்த்து நன்கு கலந்து விதை நேர்த்தி செய்யவும், சொட்டு நீர் பாசனத்தின் நன்மைகள் குறித்து விளக்கம் அளித்தார்.

அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பாரதிராஜா உழவன் செயலியை பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமளித்தார்.

